Vol:4 Issue 2 Nov.2020 P.g No: 35 - 41




ISSN : 2456-821X

***கட்டுரையாளர் :***

**ஆ.டேவிட்,**

*பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,*
*மதுரை.*

shcrpt.edu

### *தலைப்பு : கிறித்துவக் காப்பியத்தில் தலைமை மாந்தர் இனவுணர்வு*

### *(எஸ்தர் காவியம்)*

### *முன்னுரை*

இலக்கியம் மக்களின் வாழ்வியலை எடுத்துரைக்கும் கருவி ஆகும். இக்கருவி ஒவ்வொரு காலக்கட்டத்திலும் பல பரிணாமங்களைப் பெற்று விளங்குகிறது. அவ்வகையில் கிறித்துவக் காப்பியங்கள் பல இருந்தாலும் விவிலியத்தின் பழைய ஏற்பாட்டை மையமாக வைத்து எழுதப்பட்ட எஸ்தர் காப்பியம் சிறப்பிடம் பெற்றுள்ளதாக அமைந்துள்ளது. அந்த வகையில் இவ்விரு காப்பியத்தியத்தின் தலைமைப் பாத்திரங்களை எவ்வாறெல்லாம் சித்தரித்துள்ளார்கள் என்பதை நிரல்படுத்துவதையே இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**எஸ்தர் காப்பியச் சுருக்கம்**

பாபிலோனியச் சக்கரவர்த்தி நேபுகாத்நேசன் என்ற மன்னன் யூத நாடுகளின் மீது படையெடுத்து, யூதேயாவின் அரசன் எகொனியாவைச் சிறைபிடித்துச் செல்கிறான். அப்போது எருசலேமிருந்து மொர்தெகாய் என்பவனையும் சிறைப்பிடித்துச் சென்றான். மொர்தெகாயின் சிறிய தந்தையின் மகள் எஸ்தர், தன் பெற்றோர் இறந்துவிட, அண்ணன் மொர்தெகாயின் அரவணைப்பில் வளர்கிறாள். சூசான் நகரைத் தலைமையாய்க் கொண்டு அகாஸ்வேரு மன்னன் ஆண்டு வந்தான். மன்னனின் மனைவி வஸ்தி தேரில் அமர்ந்து உலா வர மறுத்ததால் அவளை நீக்கி விட்டான். மன்னன் செங்கோலை நீட்டித் தன் கிரீடத்தை எஸ்தர் சிரசின் மீது வைத்து ராணியாக்கிக் கொண்டான். அரசனின் அமைச்சர் ஆமான் யூதரினத்தை அழிக்க முற்பட்டான். மொர்தெகாய் அதனை அறிந்து இளவரசி எஸ்தரிடம் தெரியப்படுத்துகிறான். இன உணர்வு கொண்ட எஸ்தர், தன்னுயிரைத் துச்சமென மதித்து யூதரினத்தைக் காக்க உறுதியேற்கிறாள். அரசனையும் ஆமானையும் விருந்திற்கு அழைக்கிறாள். அவர்கள் இருவரும் உடன்பட்டு விருந்துண்ண வருகிறார்கள். விருந்துண்ணும்போது மது மயக்கத்திலிருந்த ஆமான், எஸ்தரின் படுக்கையில் இடறி விழுகிறான். ஆமான், அரசி எஸ்தரைக் கெடுக்க துணிந்தான் என்றெண்ணி அரசன் தூக்கிலிட உத்தரவு பிறப்பிக்கிறான். யூத இனத்தை அழிக்கும் சட்டத்தை மாற்றி, பூர் சீட்டைக் கிழித்தெறிந்து வெற்றியடைந்த இனவுணர்வு நாளை "பூரிம்" விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இனமான உணர்வு கொண்டு யூதரினத்தை எஸ்தர் எவ்வாரெல்லாம் மீட்டாள் என்று அனைவரும் பேசப்படுவதாக அமைந்ததே எஸ்தர் காப்பியமாகும்.

**இன உணர்வு மேலோங்கிய எஸ்தர்**

அகாஸ்வேரு மன்னனுடன் வாழ்ந்து வந்த எஸ்தர், தன்னுடைய யூதரினத்தை ஆமான் என்னும் அமைச்சன் அழிக்க நினைத்ததை அறிந்து கொள்கிறாள். தம் இனத்தை அழிக்க எண்ணிய ஆமானைப் பழிவாங்க எண்ணியவளாய், மன்னன் அரசவையில் நுழைந்து அரசனிடம் முறையிட விரும்பி அரசவைப் புகுகிறாள்.

*" இனத்தின் உணர்வின் மிகுதியால்*

*இறக்கவுந் துணிந்து விட்டேன்*

*மனதிற்கு கவலை கொள்ளாது*

*மன்னவன் மண்டபஞ் செல்லுவேன்*

*சினத்திற் செங்கோல் நீட்டாது*

*சீறியே மன்ன விருந்தால்*

*இனத்தின் மானங் காத்தங்கு*

*இன்பமாய் இறந்து மடிவேன் "* (எ.கா. 316)

மன்னன் கோபப்பட்டால் மானத்தைக் காத்து நின்று மகிழ்ச்சியாய் இறந்து மடிவேன் என்று கூறியவளாய் யூதர் இனத்தைக் காக்க முற்படுகிறாள். சிலப்பதிகாரத்தில் கண்ணகி, கோவலன் இறந்தவுடன், மதுரை பாண்டிய மன்னனிடம் சென்று எவ்வாறு முறையிட்டாலோ, அதுபோல் யூத இனத்தை அழித்துக் கொண்டிருக்கும் ஆமானை அழிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் எஸ்தர் மன்னனின் அரசவைக்குச் சென்று முறையிடுவதாகக் காட்டப்படுகிறது. ஒரு பெண் தனியே சென்று இனமக்களைக் காப்பாற்ற போராளியாகச் சித்தரிக்கப்படுகிறாள் என்பது இங்கு காணத்தக்க செய்தியாகும்.

**மன்னனிடம் மன்றாடிய எஸ்தர்**

யூதர்களை அழிவிலிருந்து மீட்க எஸ்தர்க்கு இனவுணர்வை மொர்தெகாய் ஊட்டுகிறான். அரசவைச் சென்ற எஸ்தர், கண்ணீரோடு அழுது முறையிடுகிறாள்.

*"இனத்தை மீட்கும் எண்ணத்தால்*

*இதயங் குமுறி நின்றேன்*

*மனத்தின் கவலை நீங்க*

*மன்ன என்னைத் தாங்கினேன்*

*கனத்தில் உயர்ந்துநான் ஓங்கக்*

*காவல் கனிவு காட்டினை*

*தனத்தைப் பணத்தை வேண்டிலேன்*

*சனத்தைக் காக்க வேண்டினேன்"* (எ.கா. 718.)

எஸ்தர் தனக்குப் பணத்தைச் சேமித்து வைத்துக்கொள்வதற்காக மன்னனிடம் வேண்டாமல், தன் யூதரின் மக்களைக் காப்பாற்றுவதற்காக தான் மன்றாடுவதாகக் காட்டப்படுகிறாள். அரசன் பெயரில் மடல் வரைந்து வெளியிட உரிமையளிக்கின்றான். அமைச்சர்கள், மூப்பர்களிடம் தெரிவித்து ஆலோசனை பெற்று, அரசன் முத்திரை பதித்த செய்தியை அறிவிப்பு செய்கிறாள். இவ்வாறு ஒர் இனத்தைக் காக்க எஸ்தர் பல வழிகளில் முயற்சி செய்ததாகக் கூறப்படுகிறது. மேலும், பெண்ணாகப் பிறந்தாலும் யூதரினம் காக்க தனியாக நின்று போராடுவது போல காட்டப்படுகிறது.

**சட்டமியற்றும் அதிகாரம் பெற்ற எஸ்தர்**

எஸ்தர் மன்னனிடம் இதுவரை யூதர்கள் ஐந்நூறு பேருக்கு மேல் இறந்து உள்ளார்கள் என்று கூறுகிறாள். மேலும், பலரைக் கொல்லும் முன்பு அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று அரசனிடம் எஸ்தர் கூறுகிறாள். அரசன் அனைத்தையும் கேட்ட பின்பு, யூதரினத்தைக் காக்க சட்டமொன்றை எழுதி, எந்தன் முத்திரையைப் பெற்றுச் செல்வாயாக எனக் கூறுகின்றான்.

*"ஆன்றவர் பெருமையை யூதர்கள்*

*அடைந்தனர் உன்னால் எஸ்தரே*

*ஊன்றிடுங் கோலாக ஆணைதான்*

*ஊடனே இரவினிற் பிறந்திடும்*

*சான்றாகச் சட்டம்நான் செய்குவேன்*

*சார்ந்திடும் பகைவர்கள் செய்குவேன்*

*தோன்றிய துங்கொன்று தூக்குவாய்*

*தொடர்ந்துன் னினங்கள்காத்து ஆக்குவாய்"* (எ.கா. 730.)

அகாஸ்வேரு மன்னன் சொன்னவுடன் சூசான் நகரம் முழுவதும் செய்திகள் பரவின.

*"உதய சூரியன் அரசு கிழக்கில்*
*உதித்தது வெற்றி முரசம்*
*எதையுந் தாங்கும் இதயம் வேண்டும்*
*என்று முழக்கம் இட்டது*
*வதைகள் தொடங்க யூத ரினத்தார்*
*வலிதிற் பகைவரைத் தேடினார்*
*கதையை முடிக்க நாட்டி யெங்கும்*
*கயவர் பலரைச் சாடினார்"* (எ.கா. 735.)

காலைக் கதிரவன் உதிக்கும் நேரத்தில் வெற்றி முரசு கொட்டும் போதிலிருந்தே யூதரினத்தார் பகைவர்களைத் தேடிக் கொண்டிருந்தார்கள். பகைவர் எங்கிருந்தாலும் அவர்களைக் கொன்று குவிக்கும் எண்ணத்தை மனதிற் கொண்டார்கள். அதன்படியே கொன்றும் குவித்தார்கள். இவ்வாறு இரண்டே நாட்களில் பகைவர்கள் அனைவரையும் கொன்று குவித்ததாகக் கூறப்படுகிறது.

**பூரிம் வெற்றி விழாவெடுத்த எஸ்தர்**

பருவக்குழந்தை முதல் பட்டத்து குமரி வரை அனைத்து யூதர்களையும் காத்து வந்த எஸ்தர், பதின்மூன்று நாட்களில் பகை ஒழித்து, பதினான்காம் நாளில் ஓய்வெடுத்து, பதினைந்தாம் நாளில் மாநிலம் முழுவதும் விழாவொன்றை எடுக்க செய்தாள்.

*"ஆதார் மாதம் பதின்மூன் றாம்நாள்*
*அழிந்தே யொழிந்தார் யூதர் பகைவர்*
*சூதரென் பாரை அடி யொரு தொலைத்துச்*
*சூழ்ந்துவந் துற்ற அழிவை நிறுத்திப்*
*பாதகர் எண்ணிய சதிகளை முறித்துப்*

*பாரினில் எங்கணும் யூதர்கள் மீண்டனர்*

*மாதர்கள் குலத்தின் மாணிக்கம் எஸ்தர்*

*வழங்கிய வாழ்வே யூதரில் வாழ்வு"* (எ.கா. 743.)

நாட்டில் அனைவரும் பாட்டுப்பாடியும், பரிசுகள் கொடுத்தும், வெடிவெடித்தும், விருந்துண்டும் விழாவினைக் கொண்டாடினார்கள். வண்ணத் தோரணங்கள் கட்டியும், புத்தாடை உடுத்தியும், ஆடல்பாடல் நிகழ்வுகள் நடத்தியும் மகிழ்ச்சியில் திளைத்தார்கள். "எங்கள் பகைவர் எங்கோ மறைந்தனர், இங்குள்ள யூதர்கள் ஒன்றாக இணைந்ததைக் கண்டு" என்பதுபோல் விழாவெடுத்து கொண்டாடியதாகக் கூறப்படுகிறது.

*"இனமான உணர்வுகள் என்பன மாந்தரின்*

*இரத்தத்திற் கலந்த இயல்பான உணர்வு*

*துனதாட்சித் திமிராலே ஒன்றுமற் றொன்றினைத்*

*தாக்குதல் இனங்களுக் கழகான தில்லை*

*வனவிலங் கல்லவே மக்களின் இனங்கள்*

*வதைத்திடல் கொன்றிடல் மறைநெறி யாகுமா*

*இனமான மக்களில் யாரையும் மதிப்போம்*

*இனங்களில் வேற்றுமை யின்றெனை விதிப்போம்"*(எ.கா. 827.)

விலங்குகள் ஆறறிவு இல்லாததால் ஒன்றையொன்று தாக்குகின்றன. ஆனால், பகுத்தறிவு கொண்ட மனிதன் அடித்துக்கொண்டு சாகின்றான். எந்த இனமாக இருந்தாலும் மதித்திடுவோம். இனங்களிலே வேற்றுமை இல்லை என விதியினை வகுப்போம் என்ற உறுதியினை அனைவரும் எடுத்துக்கொள்வதாகக் கூறப்படுகிறது.

**முடிவுரை**

சமுதாயத்தில் சாதாரணப் பெண்ணாகப் பிறந்து வளர்ந்து தன்னுடைய வாழ்க்கையை இனப்போராட்டத்திற்காக அர்ப்பணித்தவள் எஸ்தர். இன்றைய காலக்கட்டத்தில் சுயநலனை



shcpt.edu

மையப்படுத்தி வாழ்பவர்களே அதிகம். அவற்றில் பொது நலன் சார்ந்து வாழ்ந்தவர்கள் வெகுசிலரே. அவ்வாறு வாழ்ந்தவர்களில் எஸ்தர், யூதரினம் அழிந்துவிடக்கூடாது என்பதற்காகத் தன்னுடைய வாழ்க்கையைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக முன்மாதிரியாக வாழ்ந்துகாட்டியுள்ளார். புரட்சிப்பெண்ணாக, இனமான உணர்வு மேலோங்கி, தன் இனமக்கள் அனைவரையும் காத்து வழிநடத்திய புதுமைப் பெண்ணாக எஸ்தர் வாழ்ந்து சிறப்புற்றாள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**அடிக்குறிப்புகள்**


*1. ராபின்சன் குருசோ.செ., எஸ்தர் காவியம்., சோபியாராணி பதிப்பகம்., உதகை. 1986.*

*2. ராபின்சன் ஞான., தமிழ்க் கிறித்தவ மரபு ., தமிழ் இறையியல் நூலோர் குழு, மதுரை. 1985.*

*3. இளவரசு.சோம., காப்பியத்திறன் , மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.2010.*


shctpt.edu